# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

07.11.2020 சனிக்கிழமை


## புதினம் தெரியுமோ?

கல்லுண்டாயில கட்டின தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்தின் புதிய கட்டடம் நாளைக்கு திறக்கப்படப்போகுது. நாமல் ராஜபக்ச திறந்து வைக்கப் போகிறாராம். இங்க இருக்கிற அமுல்பேபியின்ர அழைப்பின் பேரில இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்படப் போறதா அங்க பதிக்க இருக்கிற கல்வெட்டில எழுதியிருக்காம்.

இந்தக் கட்டடத்துக்கான கோரிக்கையை முன்வைத்தவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா. கடந்த நல்லாட்சி காலத்தில அவர் முன்வைத்த பரிந்துரைக்கு அமைவாக 50 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுத்தான் இந்தக் கட்டடம் கட்டப்பட்டது.

கடந்த ஆண்டு இறுதிக்குள்ள கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்கவேணும். ஆனா இந்த ஆண்டு மார்ச் மாதம்தான்

2

# வீடுகளில் இன்று மூவர் திடீர் சாவு!



கொரோனாவா எனக் கண்டறிய பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, நவ.7

இலங்கையில் இன்று மூவர் திடீரென உயிரிழந்துள்ளனர். மூவரும் கொரோனா வைரஸால் உயிரிழந்தார்களா என்பதை அறிய பி.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

2


## கொரோனாவின் பிடியில் 80 கர்ப்பிணிகள்

கொழும்பு, நவ.7

நாட்டில் இதுவரை 80 கர்ப்பிணிகளுக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 4 கர்ப்பிணிகள் குழந்தை பிரசவித்துள்ளனர்

2

## கிழக்கில் சதத்தை எட்டியது கொரோனா



கொழும்பு, நவ.7

கிழக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை சதத்தை (100) எட்டியுள்ளது. இறுதியாக மட்டக்களப்பு மாவட் டம் ஏறாவூர்ப் பிரிவில் மேலும் 4 பேருக்கும், மட்டக்களப்பில் 2

2



## போகம்பர கைதிகளுக்கும் கொரோனா

கொழும்பு, நவ.7

வெலிக்கடைச் சிறையில் உள்ள கைதிகளுக்குக் கொரோனா தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டிருநத நிலையில், போகம்பரச் சிறையில் உள்ள கைதிகளுக்கும் கொரோனாத் தொற்றுள்ளமை இன்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

போகம்பரை சிறைச்சாலையில் ஏழு கைதிகளுக்கு கொரோனா தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் உடனடியாக வெலிகந்தை முகாமுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## கொரோனாவை ஒழிக்க ஹோமம்

யாழ்ப்பாணம், நவ.7

கொரோானாத் தொற்றில் இருந்து நாடும், மக்களும் மீண்டு வரவேண்டும் என்பதற்காக வண்ணார்பண்ணை பெருமாள் ஆலயத்தில் சுதர்சன ஹோமமும் விசேட வழிபாடுகளும் சுகாதார நடைமுறைக்கு அமைவாக நடைபெறவுள்ளன.

2

## பணப் பரிமாற்றத்தை குறைத்தால் தப்பலாம்

*அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவுரை*

கொழும்பு, நவ.7

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து தற்காத்துக் கொள்வதற்கு பணப் பரிமாற்றத்தைக் குறைத்துக் கொள்வது முக்கியமானது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

புதிய தொழில்நுட்பத்தின் ஊடாகக் கொடுப்பனவுகளை மேற்கொள்வது தொடர்பில்

2

## ஆபத்தான பகுதிகளில் ஊரடங்கு தொடரட்டும்

*அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை*

கொழும்பு, நவ.7

மேல் மாகாணத்தில் ஆபத்தான பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை நீக்கக் கூடாது என்று அரச மருத்துவ

2

## கொரோனாத் தொற்றால் 'பட்ஜட்' விவாதமும் 'கட்'

கொழும்பு, நவ.7

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தை இந்த முறை 10 நாள்களுக்கு மட்டுப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2021 ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. அன்று நிதி அமைச்சரின் உரை மாத்திரமே இடம்பெறும்.

மறுநாளில் இருந்து வரவு செலவுத்திட்டம்மீதான விவாதம் ஆரம்பமாகும். வழமையாக பட்ஜட்மீதான விவாதம் ஒரு மாதம் நடைபெறும். (கிழமையில் ஞாயிறு தவிர்ந்த ஏனைய 6 நாள்களிலும் விவாதம் நடைபெறும்.)

ஆனால் இந்த முறை 10 நாள்கள் மாத்திரமே

2

## பேரன் இறந்த செய்தி கேட்டு அம்மம்மாவும் மயங்கிச் சாவு

யாழ்ப்பாணம், நவ.7

பேரன் உயிரிழந்த செய்தியைக் கேட்ட அம்மம்மாவும் உயிரிழந்துள்ளார். இந்த சோகச் சம்பவம் நேற்று ஆலடி, உடுவிவில் நடந்துள்ளது.

சௌந்தர்ராஜா சகிதரன் (வயது30), மாணிக்கம் நாகேஸ்வரி (வயது72) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

சகிதரன் நேற்றுமுன்தினம் இரவு உணவு அருந்திவிட்டு உறக்கத்துக்குச் சென்றுள்ளார். இன்று அதிகாலை 4 மணிளவில் கோயில் செல்வதற்காக அரவது மனைவி அவரை எழுப்பியுள்ளார். அப்போது அவர் மயக்கமடைந்த

2

# வீடுகளில் இன்று....

பண்டாரகம பிரதேசத்தைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் இன்று காலை திடீரென உயிரிழந்துள்ளார். உயிரிழந்த வருக்கு 21 வயது எனவும், அவருடைய உயிரிழப்பு அவருடைய வீட்டிலேயே நிகழ்ந்திருக்கின்றது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பெண்ணின் உயிரிழப்பு கொரோனா வால் நிகழ்ந்ததாக என்பது தொடர்பில் அறிவதற்காக அவருக்குப் பி.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மாளிகாவத்தையைச் சேர்ந்த 42 வயதுடைய பெண், புறக் கோட்டையைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஆகிய இருவர் அவர்களின் வீடுக ளில் இன்று முற்பகல் திடீரென உயிரி ழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. இந்த உயிரிழப்புக்கள் கொரோனா வால் நிகழ்ந்ததா என்பதைக் கண்டறிய பி.சி.ஆர். பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நேற்று வரையில் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர் கள் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்திருந் துள்ளது. (எ-22)

## கிழக்கில்...

பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள் ளது எனக் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா ளர் அழகையா லதாகரன் தெரிவித்தார். இதுவரை கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 60 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 13 பேரும், கல்முனைப் பிராந்தியத்தில் 20 பேரும், அம்பாறைப் பகுதியில் 7 பேரும் கொரோனாத் தொற்றுடன் இனங் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கல்முனைப் பிராந்தியத்தில் வணக்கத் தலங் கள் மீதான தடை இன்னும் நீக்கப்படவில்லை என்று கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்தியர் கு.சுகுணன் தெரிவிக்கிறார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

"என்னாலோ அல்லது எனக்குக் கீழான எந்தவொரு அதிகா ரிகளாலோ பள்ளி வாசல்களோ, கோயில்களோ, கிறிஸ்தவ தேவாலயங்களோ, விகாரைகளோ மீண்டும் பொதுமக்களுக் காகத் திறப்பது சம்பந்தப்பட்ட எந்தவிதமான புதிய அறிவு றுத்தல்களும் இதுவரை கொடுக்கப்படவில்லை. விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் -என்றார். (எ-22)

## கொரோனாவின்...

என்றும், அவர்கள் சிகிச்சைகளின் பின்னர் வீடுகளுக்கு அனுப்பப்படுவர் என்று நிபுணத்துவ மருத்துவர் மயுரமான்ன தேவோலகே தெரிவித்துள்ளார். கிழக்கு கொழும்பு ஆதார மருத்துவமனையில் 28 கர்ப்பிணிகளுக்கு கொவிட்19 நோய்த் தொற்றுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். கொவிட்19 தொற்றுக்கு இலக்கான கர்ப்பிணிகளுக்கு சிகிச்சை வழங்கும் ஒரே பிரிவு கிழக்கு கொழும்பு ஆதார வைத்தி யசாலையிலேயே உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(எ-இ)

## ஆபத்தான....

அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.

கொவிட் 19 தொற்று அதிகம் காணப்படும் பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசி யம் என்று அந்தச் சங்கத்தின் மூத்த உறுப்பினர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஊரடங்குச் சட்டத்தை நீடிக்கத் தவறினால் நோய்த் தொற்றுப் பரவுகையைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்படும். ஊரடங்குச் சட்டம் காரணமாகவே கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது. அதே வேளை, கொரோனா தொற்றால் ஏற்படக் கூடிய உயிரிழப்புக்கள் தொடர்பாக சுகாதார அமைச்சு உரிய சாராம்சம் ஒன்றை வழங்க வேண்டும். இவ்வாறு சாராம்சப்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய உயிரிழப் புக்களைத் தவிர்க்க முடியும். என்றார்.(எஇ)

## கொரோனாவை...

யாழ்ப்பாணம் மாவட்ட இந்து குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த சிறப்பு வழிபாடுகள் நாளை ஞாயிற் றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இந்த வழிபாடுகள் நடைபெறவுள்ளன. சகல இந்து ஆலயங்களிலும் ஹோமம், விசேட வழிபாடுகளை செய்யும் வண்ணம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச விடுத்த கோரிக்கைக்கமை வாக இந்த வழிபாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. நாட்டில் உள்ள கொரோனா தொற்று அச்சத்தின் காரணமாக பொது மக்கள் யாரும் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.(எ-111)

## பணப் ....


அவதானம் செலுத்த வேண்டும் என்று சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தி யர் சமந்த ஆனந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ள தாவது

பணப் பரிமாற்றத்தின் பின்னர் கைக ளைச் சுத்தமாகக் கழுவ வேண்டும். கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து தற்காத்துக் கொள்ள எடுக்கவேண்டிய முக்கிய நடவடிக்கை இதுவாகும். பணம் மட்டுமல்ல பொருள்களைப் பகிரும்போது சுகதார நடை முறைகளைப் பின்பற்றுவது மிக முக்கியமாகும்.என்றார்.(எ-இ)

## கல்முனையில்...

"என்னாலோ அல்லது எனக்குக் கீழான எந்தவொரு அதிகாரிகளாலோ பள்ளி வாசல்களோ, கோயில்களோ, கிறிஸ்தவ தேவாலயங்களோ, விகா ரைகளோ மீண்டும் பொதுமக்களுக் காகத் திறப்பது சம்பந்தப்பட்ட எந்தவிதமான புதிய அறிவுறுத்தல்க ளும் இதுவரை கொடுக்கப்படவில்லை. விதிமுறைகளை மீறுவோருக்கு எதி ராகக் கடுமையான சட்ட நடவடிக் கைகள் எடுக்கப்படும்என்றார்.(எ-22)



## கொரோனா தொற்றால்...

விவாதம் நடத்தப்பட்டு பட்ஜட் நிறைவேற்றப்படவுள்ளது என தெரியவருகின்றது.

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தல், நாடா ளுமன்ற உறுப்பினர்களின், பணியாளர்களின் சுகாதார நலனைக் கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட் டுள்ளது எனவும், விரைவில் நடைபெறும் கட்சித் தலை வர்கள் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் இறுதிப்படுத்தப் படலாம் எனவும் தெரியவருகின்றது. (எ-44)

## பேரன் இறந்த....

நிலையில் காணப்பட்டார். அதைய டுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அப் போது அவரது அம்மம்மா பிரார்த் தனை செய்து திருநீறு பூசி அவரை மருத்துவனைக்கு அனுப்பியுள்ளார்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சகிதரன் சிலமணி நேரங்களில் உயிரிழந்தார். இந்தச் செய்தியைக் கேட்ட அம்மம்மா மயங்கி விழுந்துள்ளார். அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவம னைக்குக் கொண்டு செல்லப்பட் டார். எனினும் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம குமார் மேற்கொண்டார். (எ-26)

# வீடு புகுந்து தாக்குதல் குடும்பஸ்தர் படுகாயம்

வீட்டுக்குள் நுழைந்து இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியதில் குடும்பத் தலைவர் ஒருவர் படுகாயமடைந் துள்ளார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கணபதிப்பிள்ளை விஜிதரன் (வயது 26) என்பவரே படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று இரவு எழுதுமட்டுவாள், கிளாயில் நடந்துள்ளது. இரவு 10 மணியளவில் வீட்டு வளவுக்குள் அத்துமீறி நுழைந்த நால்வர் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ள னர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதலில் படுகாயமடைந்த குடும்பஸ்தர், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதானா மருத்துவம னைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-9)

## புதினம் தெரியுமோ

கட்டி முடிபட்டது. கடந்த ஆண்டு ஈஸ்ரர் குண்டுவெடிப்போட ஏற்பட்ட கெடுபிடியால தாமதமாகினது. இங்க இருக்கிற அதி காரிகள், இந்தக் கட்டடம் கட்டுறதுக்கு ஒதுக்கின காசு கடந்த ஆண்டு முடிவில திரும்பப் போகுது எண்டதுக்காக, திட்டம் முடிஞ்சதா பதிவைக் காட்டி அந்தக் காசை வைச்சு இந்த ஆண்டு கட்டி முடிச்சவை.

ஆனால் இந்த ஆண்டு ஆரம்பத்தில இருந்து அமுல்பேபியும் அவர்ர அல்லக் கைகளும் இணைஞ்சு, கச்சேரியின்ர நேர்மையான சில அதிகாரிகளுக்கு களங்கம் கற்பிக்கிறம் எண்டு பெட்டிசம் எண்ட பெயரில நிறையக் கடிதங்கள் போட்டவை. அதில, இந்தக் கட்டடத்துக்கு ஒதுக்கின காசை கட்டடம் கட்டி முடிக்காம கட்டினது என்று பொய் சொல்லிப் போட்டினம் என்றதும் ஒரு பெட்டிசம்.

அங்க இருந்து விசாரணைக் குழு வந்தது. ஆனா இங்க இருக்கிற அதிகாரிகள் உண்மையில நடந்தது என்னது என்பதைச் சொல்லி, தாங்கள் மக்கள் நலனுக்காக சரியாகச் செய்தோம் என்பதை நிரூபித்ததும் விசாரணைக்குழு அதை ஏற்றுக்கொண்டு திரும்பியது.

இப்ப என்னடா எண்டா, எந்தக் கட்டடம் திறக்கப்படக்கூடாது என்ற நோக்கோட அமுல்பேபி பெட்டிசம் போட்டிச்சோ, அந்தக் கட்டடத்தைதான் தன்ர அழைப்பின் பேரில திறக்கிறதாயும், அந்தக் கட்டடத்தை இங்க கொண்டு வந்ததே தான் என்றும் காட்ட முற்படுதாம். அமுல்பேபிக்குதான் வழி தேங்காய் எடுத்து தெரு பிள்ளையாருக்கு அடிக்கிறது கை வந்த கலைதானே!

-பட்சி

# முகக்கவசமின்றி நடமாடிய 30 பேருக்கு ரூ.5000 தண்டம்

கொழும்பு, நவ.7

கொரோனாப் பாதுகாப்பு சுகாதார ஆலோசனைகளை மீறி முகக்கவசம் அணியாது நடமாடிய 30 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று பொல்கஹவெல பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மஹேஷ் அமரகர தெரிவித்துள்ளார். பொல்கஹவெல நகரம் மற்றும் வாராந்த சந்தையில் முகக் கவசமின்றி சுற்றித் திரிந்த 40 பேர்களில் 30 பேருக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த 30 பேருக்கும் 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்று பொல்கஹவெல நீதிவான் பீ.என்.பிரியதர்ஷனி தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்துக்கு வருகை தராத மேலும் 10 சந்தேக நபர்கள் எதிர்வரும் நாள்களில் ஆஜராக வேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டுள்ளார். புதிய சுகாதாரச் சட்டம் உள்ளடக்கப்பட்ட வர்த்தமானிக்கமைய இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (ற-இ)

# டிசெம்பர் ஆரம்பத்தில் மரணங்கள் அதிகரிக்கும்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, நவ.7

எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஆரம்பத்தில், கொரோனா மரணங்கள் பற்றியே கூடுதலாகச் சிந்திக்க வேண்டியேற்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் பதிவான மரணங்களில், பெரும்பாலானவை கொழும்பு மாநகர சபையை அண்மித்த பகுதிகளிலேயே பதிவாகியுள்ளன.

அந்த மரணங்களில் ஏதேனும் விசேட காரணி தாக்கம் செலுத்துகின்றதா? என்பது தொடர்பில் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

ஒன்பது மாதங்களில் 13 மரணங்கள் என்ற போதும், தற்போது இரு வாரங்களில் மரணங்கள் அதிகரித்துள்ளன. இது மிகவும் அபாயமான நிலைமையாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# இலங்கையில் புதிய இனப்பாம்புகள்!

கொழும்பு, நவ.7

இலங்கையில் இரண்டு புதிய வகைப் பாம்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

இந்தப் பாம்புகளை இலங்கையின் ஹெர்பெட்டாலஜிஸ்ட் (Herpetologist) மெண்டிஸ் விக்கிரமசிங்க நக்கிள்ஸ் பகுதியில் கண்டுபிடித்துள்ளார்.

அதுமட்டுமன்றி அண்மையில் இலங்கைக்கு மட்டும் உரித்தான தாசியா ஹாலியானஸ் எனும் உயிரியல் பெயருள்ள தனித்துவம் மிக்க உயிரினம் வன்னிக் காட்டில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.(ற-இ)

# கொரோனா நோயாளியால் இலவச பி.சி.ஆர் இயந்திரம்

கொழும்பு, நவ.7

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி குணமடைந்த நபர் ஒருவர் பி.சி.ஆர் இயந்திரம் ஒன்றை இலவசமாக வழங்கியுள்ளார்.

இந்த நபர் ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனைக்கே இந்த இயந்திரத்தை வழங்கியுள்ளார்.

இந்த மருத்துவமனையில் இதற்கு முன்னர் பி.சி.ஆர் இயந்திரம் இல்லாமையால், இந்த மருத்துவமனைக்கு அவசியமான பி.சி.ஆர்.பரிசோதனைகள் பொரளை மருத்துவ நிலையம் ஊடாகவே இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் புதிய இயந்திரம் மூலம் நாள் ஒன்றுக்கு 300 பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என்று மருத்துவமனை இயக்குநர் ரத்னசிறி ஏ.ஹேவாகே தெரிவித்துள்ளார். (ற-இ)

# காய்ச்சலால் உயிரிழந்த சிறுமிக்குத் தொற்றில்லை

## கிண்ணியா சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

மட்டக்களப்பு, நவ.7

காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, உயிரிழந்த சிறுமிக்கு கொரோனாத் தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கிண்ணியா சுகாதார மருத்துவ அதிகாரி ஏ.எம்.ஏ. அஜீத் இன்று தெரிவித்தார். இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

காய்ச்சல் மற்றும் வயிற்றோட்டம் காரணமாக கிண்ணியா றஹ்மானியா பிரதேசத்தைச் சேர்ந்த ஏழு வயதுச் சிறுமி நேற்று இரவு கிண்ணியா தள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். சந்தேகத்தின் அடிப்படையில் இவரது மாதிரி பி.சி.ஆர் பரிசோதனைக்காக மட்டக்களப்பு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன்போது சிறுமிக்கு கொரோனாத் தொற்றில்லை என்று உறுதிப்படுத்தப்பட்டு அறிக்கை இன்று கிடைத்துள்ளது. (ற-இ)



# ஆபத்தான வலயமாக பொரளை

கொழும்பு,நவ.7

பொரளையில் அதிகளவானவர்கள் கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். அங்கு சில பகுதிகளில் எழுமாறான அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில், 90 வீதமானவர்களுக்கு நோய்த் தொற்று ஏற்பட்டமை உறுதியாகியுள்ளது.

சனத்தொகை பரம்பல் அதிகளவில் காணப்படும் இந்தப் பகுதிகளில், எழுமாறான அடிப்படையில் பி.சி.ஆர் பரிசோதனை நடாத்தப்பட்டுள்ளது. நோய்த் தொற்று உறுதியானவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். நோய்த் தொற்றாளர்களுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது. (க-இ)

# இன்றும் 30 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு,நவ.7

அபுதாபி, கட்டார் மற்றும் இந்தியாவில் தங்கியிருந்த 30 பேர் இன்று சனிக்கிழமை காலை நாடு திரும்பியுள்ளனர்.

கட்டார் டோஹாவிலிருந்து 18 பேரும், இந்தியா சென்னையிலிருந்து 11 பேரும், அபுதாபியிலிருந்து ஒருவரும் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களுக்குப் பி.சி. ஆர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.(க-இ)

# 221 பொலிஸாருக்கு கொரோனாத் தொற்று

கொழும்பு,நவ.7

மேல் மாகாணத்தில் இதுவரை 221 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதற்கமைவாக தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 300ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 385 ஆக பதிவாகியுள்ளது. (க-இ)

# அரிசி 'மாஃபியாவுக்கு' எதிராக சட்டம் பாயும்

கொழும்பு, நவ.7

இலங்கையில் காணப்படும் அரிசி 'மாஃபியாவுக்கு' எதிராக அரசு விரைவில் நடவடிக்கைகளை

மேற்கொள்ளவுள்ளது என்று கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

கன்னோருவ பகுதியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதற்கமைய நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக அரிசியை விற்பனை செய்பவர்களை கண்டறிவதற்கு சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும், இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்டம் நிலைநாட்டப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-இ)

# கொரோனாக் கட்டுப்பாட்டு வழிகாட்டி வெளியிடப்பட்டது

கொழும்பு, நவ.7

கொரோனாப் பரவலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக தொற்று நோயத் தடுப்பு நிபுணர்கள் மற்றும் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட ஆவணமொன்று முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவினால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், தொற்று நோய்க்கு இன, மத, கட்சி பேதங்கள் எதுவும் கிடையாது. இந்த தொற்றுநோயின் காரணமாக தற்போது மனித சமுதாயம் கடும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது. இந்த சூழ்நிலையில் இதுகுறித்த நிபுணத்துவமுடையவர்களுடன் கலந்தாலோசித்து கொரோனாப் பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் உள்ளடங்கிய இந்த ஆவணத்தை வெளியிட்டுள்ளோம். கொரோனாத் தொற்றினால் நேற்றுமுன்தினம் ஐவர் மரணித்துள்ளனர். உண்மையில் அவர்களது உடல்நிலை மோசமடையும் பட்சத்தில் அவர்கள் மருத்துவமனையிலேயே உயிரிழந்திருக்க வேண்டுமேயன்றி, வீடுகளில் அல்ல. உண்மையில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளடங்கலாக அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைவது மிகவும் அவசியமானதாகும் எனத் தெரிவித்தார். (வ-இ)



# காற்று மாசுபாடு கொழும்பில் வீழ்ச்சி

கொழும்பு,நவ.7

கொழும்பில் காற்று மாசுபாட்டின் அளவு கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு மறுசீரமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, வீதிகளில் வாகனங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

அத்துடன் மழை காற்று மற்றும் வானிலை காரணமாக, காற்றின் தரம் மேம்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி அமைப்பு விஞ்ஞானி சரத் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

இந்தக் காரணங்களால், காற்று மாசுபாடு மற்றும் வளிமண்டலத்தில் காபனீர் ஒக்சைட்டின் அளவு கணிசமாகக் குறைந்துள்ளது என்று அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.(க-இ)

# ஒருவர் கொலை

கொழும்பு, நவ.7

அம்பலாங்கொடை-கொடஹேனப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை அதே பகுதியைச் சேர்ந்த மூன்று பேர் கூரிய ஆயுதத்தால் தாக்கி நேற்று இரவு கொலை செய்துள்ளனர்.

உயிரிழந்தவர் 28 வயதான நபர் எனத் தெரியவருகின்றது.(ற-இ)

# ஆலோசனையற்ற செயற்பாடு திமிங்கிலங்களுக்கு ஆபத்து

*சுட்டிக்காட்டுகின்றார் கடல் உயிரியலாளர்*

கொழும்பு, நவ.7



கரையொதுங்கிய திமிங்கிலங்கள் விடயத்தில் நிபுணர்களின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளாமல் செயற்பட்டமையால் திமிங்கலங்கள் மேலும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன என உலகப் புகழ்பெற்ற கடல் உயிரியலாளர் கலாநிதி ஆஷா டி வொஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2ஆம் திகதி பாணந்துறை கடற்கரையில் ஒதுங்கிய நூறு திமிங்கிலங்களை மீட்பதற்கு உள்ளூர்வாசிகளும் அதிகாரிகளும் மேற்கொண்ட முயற்சிகளைப் பாராட்டிய அவர், இந்த விலங்குகளை மீட்டு கடலுக்கு அனுப்புவது மாத்திரமன்றி, இது மிகவும் சிக்கலான செயல் எனவும் சுட்டிக்காடினார். திமிங்கலங்களை, விரைவாக கடலுக்குத் திருப்பி, ஆழமான நீரை நோக்கி அனுப்பாவிட்டால், அவை மீண்டும் கரைக்குத் தள்ளப்படும். மேலும், அவை கரைக்குச் அடித்துச் செல்லும்போது, அவைகளின் ஈரத்தன்மையை அவ்வாறு பேண வேண்டும். அதனை துடைத்தல் ஆகாது என அவர் குறிப்பிடுகின்றார். தலைக்கு மேலே உள்ள துளை மூட அனுமதிக்கக் கூடாது, இது திமிங்கலங்கள் சுவாசிக்கப் பயன்படுகிறது. சிற்றலைகள் வழியாக நீர் நுழைவதைத் தடுக்க விலங்குகளை நிமிர்ந்து இருக்குமாறு வைக்க வேண்டும்.

மேலும், அவைகள் சில மணிநேரங்களுக்கு மேல் கடற்கரையில் இருந்தால், கடல் நீர் இல்லாமை மற்றும் உடல் பாரம் காரணமாக உடல் நரம்புகள் நசுக்கப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். இதுபோன்ற விடயங்கள் பொதுவாக ஒரு சாதாரண நபரின் எண்ணத்தில் ஏற்படாது என்பதால், விரைவில் நிபுணர் ஒருவரின் ஆலோசனையைப் பெறுவது முக்கியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (வ-இ)



# சௌபாக்கியாவின் கீழ் 110 வேலைத்திட்டங்கள்

திருகோணமலை, நவ.7

சௌபாக்யா வேலைத்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் முதற்கட்டமாக 110 வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என மாவட்டச் செயலர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார். மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற சௌபாக்கியா வேலைத் திட்டம் தொடர்பான கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இந்தத் திட்டத்தில், குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் போன்ற நீர்ப்பாசன புனர்நிர்மாணப்பணிகள் அடங்குகின்றன. ஜனவரி மாதம் 29 ஆம் திகதி நீர்ப்பாசன அமைச்சர் சமல் ராஜபக்ச 5 குளங்களின் வேலைகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கவுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவருமான கபில நுவன் அத்துக்கோரல, விவசாயத்துக்கு அவசியமான நீரைத் தேக்கி வைத்து விவசாயிகளது நீர்ப் பிரச்சினையை தீர்த்து நாட்டின் உற்பத்தி கட்டமைப்பை மேம்படுத்துவது இதன் பிரதான நோக்கமாக அமைகிறது என்றார். நிகழ்வில் பிரதேச செயலாளர்கள், திருகோணமலை மாவட்ட கமநல அபிவிருத்தி ஆணையாளர் , திணைக்கள தலைவர்கள் , அரசியல் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (வ-இ)

# ஆயுதங்களுடன் 7 பேர் கைது

கொழும்பு,நவ.7

களுத்துறை தெற்கு சென்ரல் சந்தியில் முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் பயணித்த 7 பேர், ஆயுதங்களுடன் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து, கைக்குண்டு ஒன்று, ரி56 ரக 4 தோட்டாக்கள், 4 வாள்கள் மற்றும் 6 கத்திகள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

22 தொடக்கம் 36 வயதுக்குட்பட்டவர்களே கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (க-இ)

# புத்தளத்தில் 71 பேருக்கு தொற்றியது கொரோனா

புத்தளம், நவ.7

புத்தளம் மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 71ஆக உயர்வடைந்துள்ளது என மாவட்டத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் தினுஷா பெர்னான்டோ தெரிவித்தார். தொற்றுக்குள்ளானவர்கள் மாவட்டத்திலுள்ள மற்றும் வெளிப் பிரதேசங்களிலுள்ள கொரோனா சிகிச்சை மத்திய நிலையங்களில் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசங்கள் எவையும் இதுவரை முடக்கப்படவில்லை என்றும் தொற்றாளர்களின் குடும்பங்கள் உள்ளடங்களாக ஆயிரத்து 500 பேர் அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (வ-இ)

# ஊரடங்குச் சட்டத்தை மீறிய 2 ஆயிரத்து 682 பேர் கைது!

கொழும்பு, நவ.7

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் ஊரடங்கு உத்தவை மீறிய 150 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஊரடங்கு உத்தரவை மீறிப் பயணித்த 21 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டுக்காக 2 ஆயிரத்து 682 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 403 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன .

அத்துடன், முகக் கவசம் அணியத் தவறியமை மற்றும் சமூக இடை வெளியைப் பின்பற்றத் தவறியமை போன்ற குற்றச்சாட்டுகளுக்காக இது வரை 104 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-இ)

### கொரோனாப் பரவல்:

# கிராம சேவையாளர்களுக்கு புதிய செயற்றிட்டம் அறிமுகம்

கொழும்பு, நவ.7

கொரோனாப் பரவலிருந்து கிராம சேவையாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு பொது நிர்வாக அமைச்சு செயற்றிட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.

இதன்படி கிராமசேவையாளர் ஒருவரிடம் குணநலச்சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள வரும் பொதுமக்கள் இந்த குணநலச் சான்றிதழில் தமது கையொப்பத்தை இடத்தேவையில்லை.

கிராம சேவையாளர் கையொப்பம் இல்லாமலேயே பொதுமக்கள் தமக்கான குணநலச்சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்குப் பதிலாக நாட்டில் நிலவும் கொரோனாப் பரவல் காரணமாக விண்ணப்பதாரியிடம் கையொப்பம் பெறுக்கொள்ளப்படவில்லை என்ற வசனம், குணநலச்சான்றிதழ்களில் விண்ணப்பத்தாரியின் கையொப்பம் என்று குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கிராமசேவையாளரால் குறிப்பாக எழுதப்படவேண்டும் என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான சுற்றுநிருபம் நாட்டிலுள்ள அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ற-இ)

# மருத்துவர் எலியந்த வைட் செய்தது மூடநம்பிக்கை!

### விமர்சிக்கிறார் தேசிய மனநல சுகாதார சிரேஷ்ட மனநல மருத்துவர்

கொழும்பு, நவ.7

கொரோனா வைரஸிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக மருத்துவர் எலியந்த வைட் உட்பட அனைவரும் செய்வது மூட நம்பிக்கையான விடயங்கள் என்றும், அவற்றில் அறிவியல் ரீதியான எந்த அடிப்படைகளும் இல்லை என்றும் தேசிய மனநல சுகாதார கல்வி நிறுவனத்தின் சிரேஷ்ட மனநல மருத்துவர் கபில ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

கொரோனாவிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்காக மருத்துவர் எலியந்த வைட் மந்திரித்த, நான்கு தண்ணீர் கலசங்கள் ஆற்றில் விடப்பட்டுள்ளன. அவர் விஷ்வ சக்தியின் மூலம் இந்த தண்ணீர் கலசங்களை மந்திரித்தார் என்று கூறப்படுகின்றது.

அப்படி ஒரு சக்தி இருக்குமாயின் அது என்ன சக்தி, அவருக்கு எங்கிருந்து கிடைத்தது என்பதை அவர் பகிரங்கமாகக் கூறவேண்டும் இல்லையேல் அவர் செய்த எந்த நடவடிக்கை மீதும் நம்பிக்கை வைக்க முடியாது. இவை அனைத்தும் மன ரீதியான ஏமாற்று நடவடிக்கை என்றார். (ற-இ)



# நாட்டில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும்

கொழும்பு, நவ.7

நாட்டில் சில பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகிறன. சில பகுதிகளில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரப் பகுதிகளில் இன்று மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது. இடியுடன் கூடிய மழை பெய்யும்போது மின்னல் தாக்கங்களினால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்று தெரிவித்துள்ளது. (வ-இ)

### கொரோனாவைச் சாதமாக்கி

# இலாபம் சம்பாதிப்போருக்கு எதிராக கடும் நடவடிக்கை

### எம்.பி மதுர விதானகே தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

கொரோனா நெருக்கடிகளை சாதமாகப் பயன்படுத்தி இலாப நோக்கத்தில் மட்டும் செயற்படும் விற்பனையாளர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார். பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனாத் தாக்கம் சிறந்த முறையில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னரும் சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகள் கடுமையான முறையில் செயற்படுத்தப்படும். கொரோனாத் தாக்கத்தை கட்டுப்படுத்தவும், தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் எதிர்க்கட்சியினர் எவ்விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. நெருக்கடியான சூழ்நிலையில் இலாப நோக்கத்தை கருத்திற்கொண்டு பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்யும் விற்பனையாளர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# உரம் வழங்க நடவடிக்கை

கொழும்பு, நவ.7

விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார். இதற்கமைய நெற்செய்கைக்குத் தேவையான உரவகைகள் கமநல நிலையங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# மக்களுடைய ஒத்துழைப்பு இன்றி கொரோனாவை கட்டுப்படுத்துவது கடினம்

### மட்டக்களப்பு மாவட்ட செயலர் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, நவ.7

அரச தரப்பு எவ்வளவுதான் கட்டுப்பாடுகளை விதித்தாலும் மக்கள் ஒத்துழைப்பின்றி கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது என மட்டக்களப்பு மாவட்ட செயலர் கே.கருணாகரன் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட கொரோனாத் தடுப்பு செயலணியின் 4ஆவது விசேட கூட்டம் நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் ஒத்துழைப்பு இன்றி கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமான காரியமாகும். எனவே பொதுமக்கள் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 14 நாட்கள் தனிமையில் இருந்துகொள்ளுங்கள். மாவட்டத்தி



லுள்ள 345 கிராம சேவகர் பிரிவுகளிலும் அமைக்கப்பட்டுள்ள ஐவர் கொண்ட கண்காணிப்புக் குழுக்களுக்கான விழிப்பூட்டல் பயிற்சிகள் ஒரு வாரத்துக்குள் வழங்கப்பட்டு அக்குழு மூலமாக கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாவட்டத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டு உள்வரும் வாகனங்கள் மற்றும் நபர்களின் விபரங்களைச் சேகரிக்கும் சோதனைச் சாவடிகளில் பொலிஸாருக்கு மேலதிகமாக சுகாதாரப் பிரிவிலிருந்து ஒருவரும் மாவட்ட நிர்வாகத்துறை சார்பாக ஒருவரும் இணைக்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கும் நடவடிக்கை வலுப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (வ-46)

# ஏற்றுமதிசார் தொழில்கள் தொடர்ந்தும் முன்னெடுப்பு

### அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

கொழும்பு, நவ.7

விவசாயம், பெருந்தோட்ட, ஏற்றுமதி சார்ந்த தொழில்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலப்பகுதியிலும் துறை சார்ந்த நிறுவனங்களின் உற்பத்தி நடைமுறைகளைத் தொடர்ந்தும் அரசு முன்னெடுத்து வருகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (வஇ)

# விஞ்ஞான அணுகுமுறை கொரோனாவுக்கு எதிரி!

## ஒப்புக்கொண்டது உலக சுகாதார அமைப்பு

ஜெனிவா, நவ.7

கொரோனா வைரஸை அறிவியல் மற்றும் விரிவான, சான்றுகள் அடிப்படையிலான அணுகுமுறையால் தோற்கடிக்க முடியும் என உலக சுகாதார அமைப்பு ஒப்புக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கொரோனா போன்ற எதிர்கால அவசரநிலைகளைகட கவனிப்பதற்றான ஒரு வரைவு தொடர்பில் உலக சுகாதார சபை பரிசீலித்து வருகிறது. இந்த வரைவு சுகாதார அவசரநிலைகளுக்கான ஆயத்தத்தை வலுப்படுத்தும் மற்றும் சர்வதேச சுகாதார விதிமுறைகளுக்கு இணக்கமாக இருக்கும். இது உலகளாவிய நெருக்கடி என்றாலும், பல நாடுகளும் நகரங்களும் ஒரு விரிவான, ஆதார அடிப்படையிலான அணுகுமுறையுடன் வெற்றிகரமாக பரவலைத் தடுத்துள்ளன அல்லது கட்டுப்படுத்தியுள்ளன.

தேவையான தடுப்பூசிகள், நோயறிதல்கள் மற்றும் சிகிச்சை முறைகளின் வளர்ச்சியை விரைவுபடுத்தவும், அவை அனைத்து நாடுகளுக்கும் சமத்துவத்தின் அடிப்படையில் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் ஒரு திட்டத்தின் பின்னால் உலகம் முதன்முறையாக அணிதிரண்டுள்ளது. அடுத்த தொற்றுநோய்க்கு உலகம் இப்போது தயாராக இருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது. (வ-இ)



# அதிகரிக்கின்றது பைடனின் மவுசு!

வொஷிங்டன், நவ.7

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் ஜோ பைடனுக்கு வெற்றி வாய்ப்பு அதிகரித்துள்ள நிலையில் அவருக்கு அமெரிக்க புலனாய்வுச் சேவை பாதுகாப்பை அதிகரித்துள்ளது.

அமெரிக்க நேரப்படி நேற்று வெள்ளிக்கிழமை அவர் முக்கிய உரை ஒன்றை நிகழ்த்தவிருந்த நிலையில் அவரின் பாதுகாப்பை அதிகரிக்கும்படி அவரது பரப்புரைக் குழுவினர் கேட்டுக் கொண்டதை அடுத்தே புலனாய்வுச் சேவை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது என வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. எனினும் இது பற்றி கருத்துக் கூற புலனாய்வுச் சேவை பேச்சாளர் கத்தரின் மில்ஹோான் மறுத்துள்ளார். முக்கிய புள்ளிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடு பற்றி கருத்துக் கூற முடியாது என்று அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# அமெரிக்கா எம் பக்கம்

## பைடன் பெருமிதம்

வொஷிங்டன், நவ.7

ஜனாதிபதி தேர்தலில் தெளிவான பெரும்பான்மையுடன் வெல்லப் போகின்றோம் என இன்று காலை ஆற்றிய உரையில் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வெற்றி தொடர்பில் இறுதி அறிவிப்பு இன்னமும் வெளியாகவில்லை ஆனால் வெளியாகிவரும் தகவல்கள் நாங்கள் வெற்றிபெறுவது உறுதி என்பதை தெரிவிக்கின்றன. நேற்று முதல் இடம்பெற்ற விடயங்களை பாருங்கள்.

24 மணிநேரத்துக்கு முன்னர் ஜோர்ஜியாவில் பின்னிலையில் இருந்தோம்,நாங்கள் தற்போது முன்னிலையில் இருக்கின்றோம்.

24 மணிநேரத்துக்கு முன்னர் நாங்கள் பென்சிலவேனியாவில் பின்னிலையிலிருந்தோம். ஆனால் நாங்கள் அங்கு வெற்றிபெறப் போகின்றோம். நெவாடாவில் எங்கள் வாக்குகள் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளன. அமெரிக்கா எங்கள் பின்னால் உள்ளது நாங்கள் தெளிவான பெரும்பான்மையுடன் வெற்றிபெறுவோம்.என்றார்.(வஇ)

# அரையிறுதியில் ஸ்வெரவ்!


பரிஸ், நவ.7

பரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரின் காலிறுதி ஆட்டம் ஒன்றில், ஜேர்மனியின் இளம் வீரரான அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று சனிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜேர்மனியின் இளம் வீரரான அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், சுவிஸ்லாந்தின் ஸ்டென் வாவ்ரிங்காவுடன் மோதினார்.


இதில் 63, 76 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

அரையிறுதிப் போட்டியில், அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், ஸ்பெயினின் முன்னணி வீரரான ரபேல் நடாலை எதிர்கொள்ளவுள்ளார்.(ற)



# கொரோனா வளையத்தில் விளையாடுவது கடினம்!

புதுடில்லி, நவ.7



கொரோனா பாதுகாப்பு வளையத்தில் இருந்தாலும் நாங்கள் மகிழ்ச்சியாக விளையாடி வருகிறோம். ஆனால் இதேபோல் மீண்டும், மீண்டும் பாதுகாப்பு வளையத்துக்குள் விளையாடினால் நிலைமை கடினமாக இருக்கும் என்று விராட்கோலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாதுகாப்பு வளையத்துக்குள் இருப்பதால் ஒரே செயலை திரும்பத் திரும்ப செய்வது போல் இருக்கிறது. எங்களுக்கு அமைந்து இருப்பது போன்று அருமையான அணி வீரர்கள் அமைந்து விட்டால் இது கடினமாக இருக்காது. கொரோனாப் பாதுகாப்பு வளையத்தில் இருந்தாலும் நாங்கள் மகிழ்ச்சியாக விளையாடி வருகிறோம். ஆனால் இதேபோல் மீண்டும், மீண்டும் பாதுகாப்பு வளையத்துக்குள் விளையாடினால் நிலைமை கடினமாக இருக்கும். இதுபோல் விளையாடுகையில் போட்டி அல்லது தொடரின் கால அளவு குறித்து கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒரே சூழலில் 80 நாள்களுக்கு மேல் இருக்கும் போது வீரர்களுக்கு மனரீதியாக என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். வீரர்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களை சந்தித்துப் பேச வாய்ப்பு அளிப்பது குறித்தும் யோசிக்க வேண்டும். இந்த விடயங்கள் குறித்து தீவிரமாக சிந்தித்து முடிவு காண வேண்டியது அவசியமானதாகும் என்றார். (ற)

# ரி-20யில் மோதும் பாக்.சிம்பாப்வே

ரியாத், நவ.7

பாகிஸ்தான் மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான முதலாவது ரி-20 போட்டி இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

ராவல்பிண்டி மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில், பாகிஸ்தான் அணிக்கு பாபர் அஸாமும், சிம்பாப்வே அணிக்கு சாமு சிபாபாவும் தலைமை தாங்குகின்றனர்.

சிம்பாப்வே அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் மற்றும் மூன்று போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் சென்றுள்ளது. (ற)

